## க.பொ.த சாதாரண தரம் 2020

## முதலாந் தவணை

## செயலட்டை

## அலகு 06. சைவ சாதனங்கள்

01. அ. சைவ சாதனங்களாக விளங்குபவை எவை?
    ஆ. இவை சாதனங்கள் எனப்படுவதற்கான காரணம் யாது?
    இ. இவற்றை சிவசின்னம் என அழைப்பது ஏன்?

02. அ. சைவ சமயிகள் திருநீற்றை எப்போது அணிய வேண்டும்?
    ஆ. திருநீறு எவ்வாறு பெறப்படுகின்றது?
    இ. திருநீற்றை அணிவதால் பெறப்படும் நன்மை யாது?
    ஈ. திருநீறு அணியும் இரு முறைகளும் எவை? விளக்குக.
    உ. திரிபுண்டரமாக திருநீறு அணியத் தகுதி பெற்றோர் யார்?
    ஊ. திரிபுண்டரமாக திருநீற்றை எவ்வாறு தரிக்கவேண்டும்?
    எ. திருநீறு தரிக்கக் கூடிய இடங்கள் எவை?
    ஏ. திருநீறு தரிக்கும் போது நோக்க வேண்டிய திசைகள் எவை?
    ஐ. திருநீற்றை எவ்வாறு தரிக்க வேண்டும்?
    ஒ. திருநீற்றுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் எவை?
    ஓ. குரு, சிவனடியார் போன்றோரிடம் இருந்து திருநீற்றை எவ்வாறு பெற வேண்டும்?
    ஔ. 'நீறில்லா நெற்றி பாழ்' எனக் கூறியவர் யார்?

03. அ. உருத்திராக்கம் என்பதன் பொருள் யாது?
    ஆ. உருத்திராக்கம் எவ்வாறு தோன்றியதாகக் கூறப்படுகின்றது?
    இ. உருத்திராக்கம் எதனைக் குறிக்கின்றது?
    ஈ. உருத்திராக்கத்தை அணிவது எதற்கு அடையாளமாகும்?
    உ. பஞ்சாட்சர செபத்தின்போது உருத்திராக்க மாலை பயன்படுவது குறித்து, சம்பந்தப் பெருமான் பாடிய பதிகம் யாது?
    ஊ. உருத்திராக்கத்தை முறையாக அணிபவர்களுக்கு ஏற்படும் நன்மை யாது?
    எ. எச் சந்தர்ப்பங்களில் உருத்திராக்கம் அணிந்திருப்பது நன்மையளிக்கும்?
    ஏ. உருத்திராக்கம் தரித்தற்குரிய இடங்கள் எவை?
    ஐ. செபம் செய்வதற்கு உபயோகிக்கும உருத்திராக்க மாலையில் எத்தனை மணிகள் காணப்பட வேண்டும்?

04. அ. அகத்தே அணியும் சிவசின்னமாக விளங்குவது?

ஆ. கடவுளைத் தியானிப்பதற்கு உதவும் சிவசின்னம்?

இ. பஞ்சாட்சரத்தின் பிரதானமான இரு வகைகளும் எவை?

ஈ. பஞ்சாட்சரத்தின் பெருமைகளை விரிவாகக் கூறும் திருமுறை நூல்?

உ. பஞ்சாட்சரத்தின் பெருமைகளை விரிவாகக் கூறும் சித்தாந்த நூல்கள்?

ஊ. நமசிவாய பதிகங்களைப் பாடிய தேவார ஆசிரியர்கள்?

**விடைகள்.**

01. அ. விபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சரம்

ஆ. ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவும் கருவிகளாக விளங்குவதனால் சாதனங்கள் எனப்படுகின்றன.

இ. சிவபிரானை நினைவூட்டுவனவாக, சைவசமயத்திற்கு அடையாளமாக விளங்குவதால் சிவசின்னங்கள் என அழைக்கப்படுகின்றன.

02. அ. எப்போதும் அணிந்திருக்க வேண்டும்.

ஆ. பசுவின் சாணத்தை நெருப்பிலே சுட்டுப் பெறும் தூய நீறு

இ. எமது அகமும் புறமும் தூய்மை அடைகின்றது

ஈ. உத்தூளனம் - பரவிப் பூசுதல்

திரிபுண்டரம் - நீரில் குழைத்து மூன்று குறியாகப் பூசுதல்

உ. சமய தீட்சை பெற்றவர்கள்

ஊ. குறிகள் வளையாமலும், இடையறாதும் ஒன்றையொன்று தீண்டாதும், அகலாதும் சம இடைவெளி விட்டு அணிய வேண்டும்.

எ. உச்சி, நெற்றி, மார்பு, தொப்பூழ், முழந்தாழ்கள், புஜங்கள், முழங்கைகள், மணிக்கட்டுகள், விலாப்புறங்கள், முதுகு, கழுத்து என 16 இடங்கள்

ஏ. உத்தம திசைகளான வடக்கு அல்லது கிழக்கு

ஐ. பயபக்தியுடன், சிவபெருமானைத் தியானித்தபடி, சிறிதளவும் நிலத்தில் சிந்தாது, சிவசிவ என்று உச்சரித்தபடி, வலக்கையின் நடு மூன்று விரல்களாலும் தரிக்க வேண்டும்.

ஒ. தன்னைத் தரித்தவர்களுக்கு மேலான ஒளியைத் தருவது - விபூதி

ஒளியைக் கொடுப்பது - பசிதம்

பாவங்களை எரித்து நீறாக்குவது - பஸ்மம்

தன்னைத் தரித்த ஆன்மாக்கள் எல்லாவற்றையும் காப்பது - இரட்சை

உயிர்களது மும்மலங்களையும் நீக்குவது - ஷாரம்

ஓ. அடக்கத்துடன் அவர்களை வணங்கி, இரு கைகளையும் நீட்டி வாங்கி, வலது கையின் நடு மூன்று விரல்களாலும் அணிதல் வேண்டும்.

ஔ. ஔவையார்

03. அ. உருத்திரனின் கண்

ஆ. திரிபுரத்து அசுரர்களினால் தமக்கு ஏற்பட்ட துன்பங்களைப் பற்றித் தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டபோது, அவர்கள் மீது இரங்கிய சிவபெருமானின் கண்களில் இருந்து சிந்திய மணிகளே உருத்திராக்கம்

இ. ஆன்மாக்களிடம் இறைவன் கொண்டுள்ள பெருங்கருணையைச் சதா நினைவூட்டும் சாதனமாக விளங்குகின்றது.

ஈ. இறைவனின் திருவருட்பேற்றிற்கு

உ. "நெக்குள் ஆர்வம் மிகப்பெருகி…"

ஊ. இப்பிறவியில் உடல்நலமும், செல்வ வளமும், நீண்ட ஆயுளும் கிட்டும். மறுமையில் ஆண்டவன் அடியிணையில் மாறா இன்பம் வந்தெய்தும்.

எ. சந்தியாவந்தனம், சிவபூசை, செபம், தேவார திருவாசக பாராயணம், புராண படனம், சிவாலய தரிசனம் போன்றவற்றை செய்யும் காலத்தில்

ஏ. சிகை, சிரம், காது, மார்பு, தோள், கை ஆகிய இடங்கள்

ஐ. 108 அல்லது 54

04. அ. பஞ்சாட்சரம்

ஆ. பஞ்சாட்சரம்

இ. தூல பஞ்சாட்சரம் - நமசிவாய

சூக்கும பஞ்சாட்சரம் - சிவாயநம

ஈ. திருமந்திரம்

உ. உண்மை விளக்கம், திருவருட்பயன்

ஊ. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார்